(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** **24 UTM 203**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

பி.ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் — நேரம் : 3 மணி நேரம்

பகுதி – 3

**அற இலக்கியமும் சிற்றிலக்கியமும்**

பகுதி – அ **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(K1)

1. கற்புடைய பெண் யாருக்கு அமிர்தமாவாள்?

   (அ) தந்தைக்கு (ஆ) தாய்க்கு (இ) தமர்க்கு (ஈ) கணவனுக்கு

2. ‘பழங்கன்று ஏறாதலும் உண்டு’ எனப் பாடியவர் ………………………..

   (அ) காரியாசான் (ஆ) நல்லாதனார் (இ) முன்றுறையரையனார் (ஈ) திருவள்ளுவர்

3. செங்கீரைப்பருவம் எதனை நெற்றியில் தொட்டிட்டதாகக் குறிப்பிடுகின்றது?

   (அ) வெண்ணீறு (ஆ) சந்தனம் (இ) மூலிகை (ஈ) மை

4. சினத்தார் இனமறுத்தவன் ………………

   (அ) நந்திமன்னன் (ஆ) மகேந்திரவர்மன் (இ) பீமவர்மன் (ஈ) புத்தவர்மன்

5. குறத்தி யார் தனக்கு அண்ணன் முறையினன் என்கிறாள்?

   (அ) கந்தன் (ஆ) திருமால் (இ) சிவன் (ஈ) பிரம்மன்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. புல்லறிவாளர் வயிறு எத்தகையது?
7. விண்ணவர்க்கு மேலாய் ஆவோர் யாவர்?
8. பேய்களின் முதுகுகள் எங்ஙனம் விளங்கின?
9. சிவனின் காக்கும் அழிக்கும் தன்மையைத் திருக்கயிலாய ஞான உலா எங்ஙனம் சுட்டுகிறது?
10. மூத்த பள்ளி தன் கணவன் யாருக்கு அடிமை பூண்டனன் என்கிறாள்?

**பகுதி – ஆ** (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.**

(K3)

11. அ. ஆசாரக்கோவை கூறும் ஒழுக்கங்களை நும் பாடப்பகுதி கொண்டு எழுதுக.

(அல்லது)

ஆ. ‘சாவவுறுவான் தொழில்’ எனத் திரிகடுகம் கூறும் செய்திகளைப் பற்றிக் குறிப்பிடுக.

(த.பி.பா.)

***ETHICAL PAPER***

12. அ. 'கொல்லாமை முன்னினிது···' எனத் தொடங்கும் பாடற் கருத்தைச் சான்று காட்டி எழுதுக.

(அல்லது)

ஆ. மூதுரை எவற்றைத் துன்பம் விளைவிப்பனவென்று சுட்டுகிறது என்பதை நும் பாடப்பகுதி வழி விளக்குக.

13. அ. தமிழ் எப்படிப் பிறந்ததாகத் தமிழ்விடு தூது சுட்டுகின்றது?

(அல்லது)

ஆ. பேய்கள் உணவு சமைக்க அழைக்கும் பாங்கினைச் சான்றுடன் எடுத்துரைக்க.

14. அ. வானவர்கள் தங்களுக்குக் காட்சியருளுமாறு சிவபெருமானை வேண்டி நிற்குமாற்றைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ. நந்தியின் பெருமை காவிரியாற்றின் வழிப் புலப்படுமாற்றை விளக்குக.

15. அ. மன்னர் குறத்திக்கு மகிழ்ந்தளித்த பரிசுகள் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. அபிராமி தன் விழித்துணை ஆனதை அபிராம பட்டர் எவ்வாறு எடுத்தியம்பியுள்ளார்?

## பகுதி – இ (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.**

(K4 & K5)

16. (அ) 'நட்பாராய்தல்' அதிகாரக் கருத்தினைத் திறனாய்க

(அல்லது)

(ஆ) 'அவையறிதல்' பற்றி நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க

17. (அ) முதுமொழிக் காஞ்சி கூறும் அறங்களைப் பற்றிக் கருத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'நல்வழி' உணர்த்தும் அறங்களை நும் பாடப்பகுதி வழி மதிப்பிடுக.

18. (அ) 'பேய்களைப் பாடியது' பகுதியில் செயங்கொண்டார் கூறுவனவற்றைப் பற்றி விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்விடு தூது குறிப்பிடும் புலவர்களைக் குறித்து விவரிக்க.

19. (அ) திருக்கயிலாய ஞானவுலா குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) நந்தியின் வீரம் பற்றி நந்திக் கலம்பகம் வழி விவரித்து எழுதுக.

20. (அ) குறத்தி தான் அறிந்த நல்ல தலங்களை வரிசைப்படுத்துமாற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வடிவழகக் குடும்பன் தன் குடித்தரம் பற்றிப் பேசும் நிலையைச் சான்றுடன் எடுத்துரைக்க.



*******